{සියලුම හිමිකම් ඇවිරිණි / முழு பதிப்புரிமை உடையது / All Rights Reserved / සියලුම හිමිකම් ඇවිරිණි / முழு பதிப்புரிமை உடையது }

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித்திணைக்களம்- வடமத்திய மாகாணம்
Department of Education – North Central Province

| தரம் - | 11 | இரண்டாம் தவணை பரீட்சை - 2025 | நேரம் :2 மணி 10 நிமிடம் |
|---|---|---|---|

பாடம் :- இஸ்லாம்
பாடசாலைப் பெயர் :- ........................................
சுட்டெண் :- ........................................

# புள்ளித் திட்டம்

## இஸ்லாம் I

**(01)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **01** | 3 | **11** | 4 | **21** | 3 | **31** | 2 |
| **02** | 4 | **12** | 3 | **22** | 3 | **32** | 1 |
| **03** | 2 | **13** | 3 | **23** | 2 | **33** | 1 |
| **04** | 3 | **14** | 1 | **24** | 2 | **34** | 3 |
| **05** | 4 | **15** | 3 | **25** | 2 | **35** | 4 |
| **06** | 3 | **16** | 2 | **26** | 1 | **36** | 1 |
| **07** | 2 | **17** | 3 | **27** | 3 | **37** | 3 |
| **08** | 1 | **18** | 4 | **28** | 4 | **38** | 2 |
| **09** | 2 | **19** | 2 | **29** | 3 | **39** | 2 |
| **10** | 3 | **20** | 1 | **30** | 4 | **40** | 1 |

## இஸ்லாம் II

**(01)**

1) வஹி மத்லுவ்வு - அல்குர்ஆன், வஹி கைரு மத்லுவ்வு - அஸ்ஸுன்னா, நபிமார்கள் கண்ட உண்மைக் கனவுகள், நபி மூஸா (அலை) அவர்கள் தூர்ஸினா மலையடியில் அசரீரி வடிவில் அல்லாஹ்வுடன் பேசியது, ஸகரிய்யா (அலை) அவர்கள் சமிக்ஞைகள் மூலம் அல்லாஹ்வைத் தொழவும் புகழவும் கற்றுத்தந்தமை. *(இவற்றுள் ஏதேனும் ஒன்று)*

2) போதிய வருமானம் உள்ளவர், அடிமைகள், நபி (ஸல்) அவர்களது வம்சத்தைச் சார்ந்தவர்கள், ஸகாத் கொடுப்பவரால் தாபரிக்க கடமைப்பட்டவர்கள், முஸ்லிம் அல்லாதவர்கள்
*(இவற்றுள் இரண்டு குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

3) ஜனாஸா தொழுகை தொழுதல், ஜனாஸாவை குளிப்பாட்டுதல், கபனிடுதல், அடக்கம்செய்தல், ஊருக்கு ஒரு மார்க்க அறிஞரை உருவாக்குதல், ஊருக்கு ஒரு வைத்தியரை உருவாக்குதல். *(போன்ற பொருத்தமான ஏதேனும் இரண்டு விடைகள்)*

4) சொல் ரீதியானவை, செயல் ரீதியானவை, எண்ணம் சார்ந்தவை *(ஏதேனும் இரண்டு)*

5) தங்கம் - 85 கிராம் அல்லது 20 மிஸ்கால்
வெள்ளி - 595 கிராம் அல்லது 200 திர்கங்கள்

6) விருந்தோம்பல், மொழிப்புலமை, சுதந்திரவேட்கை, வாக்குமீறாமை *(போன்ற பொருத்தமான இரு விடயங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

7) அபூபக்ர் - ஸித்தீக், உஸ்மான் - துன் நூரைன்/ ஜாமிஉல் குர்ஆன்

8) சமூகத்தில் ஒற்றுமை பேணப்படல், சமூகத்தில் ஒற்றுமை குலையாதிருத்தல், பரஸ்பர உதவியின் அடிப்படையிலான வாழ்வுக்கு வழியமைத்தல் (இவற்றுள் ஏதேனும் இரண்டு)

9) இப்திராஷ், தவர்ருக்

10) இமாம் மாலிக் (ரஹ்), இமாம் அபூயூஸுப் (ரஹ்)

**(02)**

i. இல்ஹாத் நாத்திகம் எனப்படும் இறைவன் இல்லை என நிராகரிப்பது நாத்திகம் ஆகும்.
ரித்தத் பழைய நிலைக்கு மீளல், திரும்பிவிடுதல், பின்னோக்கி செல்லல் என்ற கருத்துக்களைத் தரும். ஒரு முஸ்லிம் தன்னைக் காபிராக்கக்கூடிய வார்த்தையை மொழிவதன் மூலம் அல்லது செயலைச் செய்வதன் மூலம் இஸ்லாத்தை விட்டும் நீங்கிவிடுதல் ரித்தத் எனப்படும்.

ii. நபி (ஸல்) அவர்களின் போதனைகள் இன்றும் பாதுகாக்கப்பட்டுள்ளமை, நபி (ஸல்) அவர்களின் தூதுச் செய்தி அனைவருக்கும் எட்டியுள்ளமை, நபி (ஸல்) அவர்களோடு இஸ்லாம் பூரணப்படுத்தப்பட்டுள்ளமை. போன்ற நியாயங்களால் அவருக்குப் பின்னர் வேறு நபி வரவேண்டிய தேவை இல்லை.

iii. அல்குர்ஆன், ஸுன்னா ஆகியவற்றின் அடிப்படையில் விதியை விசுவாசிக்கும் ஒரு மு:மின் எப்போதும் திருப்தியடைந்த மனதுடையவனாகவும் பொறுமையைக் கடைபிடிப்பவனாகவும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துபவனாகவும் இருப்பானே அன்றி ஒருபோதும் விரக்தி அடையமாட்டான். மனம் தளரவும் மாட்டான். கிடைக்கப்பெறும் விளைவில் இருந்து படிப்பினை பெற்று தொடர்ந்தும் முயற்சி செய்பவனாகவே இருப்பான். மனம் துவண்டு போகுதல், பூரித்துப் போகுதல் ஆகிய இரண்டும் மனிதனை நடுநிலை இழக்கச் செய்கின்ற பலவீனங்களாகும். கத்ர் பற்றிய நம்பிக்கை அப்பலவீனங் களிலிருந்து மனிதனைப் பாதுகாக்கின்றது. *(இவை போன்ற பொருத்தமான ஐந்து விடயங்கள் குறிப்பிடப்படுதல் வேண்டும்)*

(2+3+5 புள்ளிகள்)

**(03)**

i. நிய்யத் வைத்தல், தகுதியானவர்களுக்கு வழங்கல்

ii. மறுமையில் மன்றாடக் கூடியது, பாவங்களுக்கு மன்னிப்பையும் பரிகாரத்ததையும் பெற்றத் தரக்கூடியது, கணக்கற்ற கூலியைப் பெற்றுத்தக்கூடியது. ஈருலக சுபீட்சத்துக்கும் வழிவகுக்கக்கூடியது, சுவனத்தில் விசேட வாயிலைப் பெற்றத்தரக்கூடியது. *(இவற்றுள் மூன்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

iii. ஹஜ் கடமையை உரிய முறையில் நிறைவேற்றுவர் அன்று பிறந்த பாலகர்கள் போன்று பாவங்கள் மன்னிக்கப்பட்டவர்களாக மாறுவர்.
ஹஜ்ஜின் மூலம் ஒரு அடியான் இறைவன் முன்னிலையில் தனது அடிமைத்துவத்தை வெளிப்படுத்துவது, நன்மையான காரியங்களில் நேரத்தை செலவிடுவதற்கும் இறையச்சத்தை வளர்த்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பத்தைப் பெறுகிறான்.
ஹஜ் கடமை மூலம் சகோதர முஸ்லிம்களுடனான சமத்துவம், சகோதரத்துவம், ஒற்றுமை மேலும் விட்டுக்கொடுப்பு, சகிப்புத் தன்மை, கூட்டு வாழ்வு, மறுமை உணர்வு போன்றவை பயிற்றுவிக்கப்படுகின்றன.

(2+3+5 புள்ளிகள்)

**(04)**

i. *தரம் 11 பாடநூல் பக்கம் 57,58 இல் இடம்பெற்றுள்ள ஹதீஸ்களிலிருந்து ஒன்றையோ அல்லது பொருத்தமான வேறு ஹதீஸ் ஒன்றையோ எழுதியிருப்பின் புள்ளி வழங்கவும்.*

ii. **மஸ்ஜிதுல் ஹராம் -** முதல் பள்ளிவாசல், ஒரு ரக்அத் ஏனைய பள்ளியில் தொழும் ஒரு இலட்சம் ரக்அத்துகளுக்கு சமம். முஸ்லிம்களின் தற்போதய கிப்லா
**மஸ்ஜிதுன் நபவி -** நபி (ஸல்) அவர்களால் கட்டப்பட்டது. ஒரு ரக்அத் ஏனைய பள்ளியில் தொழும் ஆயிரம் ரக்அத்துகளுக்கு சமம், நபி (ஸல்) அவர்களின் வீட்டுடன் (அடகஸ்தளத்துடன்) இணைந்துள்ளது.
மஸ்ஜிதுல் அக்ஸா - முதலாவது கிப்லா, உலகில் இரண்டாவது கட்டப்பட்ட பள்ளிவாசல், நபி (ஸல்) அவர்கள் மிஃராஜின் போது நபிமார்களுக்கு தொழுகை நடத்திய பள்ளிவாசல்.

*(இதுபோன்ற ஏதேனும் பொருத்தமான ஒவ்வொன்று குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

iii. உயிர் வாழ்வதற்கான உரிமை, சமத்துவத்திற்கான உரிமை, தனிமனித சுதந்தித்திற்கான உரிமை, நீதி பெறுவதற்கான உரிமை, கண்ணியத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கான உரிமை, சொத்துக்களைப் பாதுகாப்பதற்கான உரிமை, மத உணர்வுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் உரிமை *(இது போன்ற பொருத்தமான ஐந்து விடயங்கள் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்)*

(2+3+5 புள்ளிகள்)

**(05)**

i. அல்லாஹ்வை ரப்பாக - இரட்சகனாக ஏற்றுக்கொண்டனர், அல்லாஹ் இலாஹ் என்பதை மறுத்தனர்.

ii. ஹிஜ்ரத்தின் போது நபி (ஸல்) அவர்களுக்கு துணை நின்றமை, நபி (ஸல்) அவர்களின் வபாத்தினால் நிலைகுலைந்த ஸஹாபாக்களை நிதானப்படுத்தியமை, கிலாபத்தை ஏற்று சிறந்த தீர்மானங்களால் ஆட்சியை ஸ்திரப்படுத்தியமை.
*(இவை போன்ற பொருத்தமான ஏதேனும் மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

iii. நபி (ஸல்) அவர்கள் மதீனாவினுள் நுழைந்த போது அவர்களது ஒட்டகம் முதன்முதலாக மண்டியிட்ட இடமே பள்ளிவாசல் கட்டுவதற்குத் தெரிவு செய்யப்பட்டது. அவ்விடம் இரு அநாதைகளுக்குச் சொந்தமானதாக இருந்தது. அவர்களிடமிருந்து அதை விலைக்கு வாங்கி கட்டிடப்பணியை ஆரம்பித்த நபி (ஸல்) அவர்கள் கட்டிட வேலையில் தோழர்களுடன் சேர்ந்து தானும் கடுமையாக உழைத்தார்கள். பள்ளியினுடைய வாயிலின் இரு ஓரங்களும் கற்களால் ஆக்கப்பட்டன. அதன்

சுவர்கள் கல்லாலும் மண்ணாலும் ஆக்கப்பட்டு பேரீத்த மரத்தினால் தூண்கள் போடப்பட்டு அவற்றின் கீற்றுகளால் முகடுகள் அமைக்கப்பட்டன. ஆரம்பத்தில் மஸ்ஜிதுன் நபவி 35 மீற்றர் நீளமும் 30 மீற்றர் அகலமும் மூன்று வாயில்களையும் கொண்டதாகவே கட்டப்பட்டது. மஸ்ஜிதோடு இணைத்து அதன் ஒருபுறத்தில் நபி (ஸல்) அவர்களின் மனைவி மார்களுக்காகச் சில அறைகள் அமைக்கப்பட்டன. கட்டிட வேலை முடிந்த பின் நபி (ஸல்) அவர்கள் அபூஜயூப் அல் அன்ஸாரி (ரழி) அவர்களின் வீட்டில் இருந்து இவ்வறைகளில் குடியேறினார்கள். அதன் பின் வீடுவாசலற்ற ஏழைத் தோழர்களுக்காகவும் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டது. இவர்கள் அஸ்ஹாபுஸ் ஸுஃப்பா (திண்ணைத் தோழர்கள்) என அழைக்கப்பட்டனர்.
*(இது போன்ற பொருத்தமான விடை எழுதப்பட்டிருப்பின் 5 புள்ளிகள். பார்க்க. பாடநூல் தரம் 11 – பக்கம் 53,54)*

(2+3+5 புள்ளிகள்)

**(06)**

i. ஈஜாப் - பொருளை விற்பவர் தான் அதனை விற்பதாக வெளிப்படுத்துதல், கபூல் - பொருளை வாங்குபவர் தான் அதனை ஏற்றுக்கொள்வதாக வெளிப்படுத்துதல்.

ii. பார்வையைத் தாழ்த்துதல், பெண்கள் அவ்ரத்தை முழுமையாக மறைக்கக்கூடிய வகையிலும் மரியாதையான அமைப்பிலும் ஆடை அணிகலன்களை அணிதல். நடை, உடை, பாவனை, பேச்சு போன்ற அனைத்திலும் இஸ்லாமிய ஒழுக்கங்களை பேணிக்கொள்ளல். ஆண்களின் உணர்வுகளை தூண்டக்கூடிய அனைத்து விதமான காரியங்களிலிருந்தும் விலகி இருத்தல். ஆண் பெண் தனித்து இருத்தலுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளாதிருத்தல். சமூக நலனையும் தேவையினை கருத்திற்கொண்டு இருசாராரும் சந்திக்கின்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல். *(இவை போன்ற பொருத்தமான ஏதேனும் மூன்று விடயங்கள் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்)*

iii. தெய்வீகத் தன்மை, சமூகத்தில் ஏற்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீர் செய்தல், சமூக நலனுக்கும் தனிநபர் நலனுக்குமிடையில் இணக்கம் காணல், ஆத்மீகத் வேவை லௌகீகத் தேவை இரண்டையும் சமகாலாத்தில் கவனத்திற்கொள்ளல், எவருக்கம் அநீதி நிகழாமை, நெகிழ்வுத் தன்மை *(ஆகியவை குறிப்பிடப்பட்டு அவை சுருக்கமாக விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்.)*

(2+3+5 புள்ளிகள்)

**(07)** *பொருத்தமான விடைகள் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்*

i. *தரம் 10 - பாடநூல் பக்கம் 137-139ஐ பார்க்கவும்.*
ii. *தரம் 11 - பாடநூல் பக்கம் 71,72ஐ பார்க்கவும்.*
iii. *தரம் 11 - பாடநூல் பக்கம் 79-82ஐ பார்க்கவும்.*
iv. *தரம் 10 - பாடநூல் பக்கம் 133-135ஐ பார்க்கவும்.*

(5x2=10 புள்ளிகள்)